DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **CC 96 / 2015**

**ALGSC நாகப்பட்டினம்**

Sessions
Deposition of witness for : PW -2 LW - 3)

| | | | |
|---|---|---|---|
| Name | : மனோகரராஜன் | Village /Taluk | : |
| Fathers Name | | Caste /Religion | : |
| or Husband Name: | | Age /Calling | : |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 21.03.2022

<u>முதல் விசாரணை</u> :

நான் தற்போது சென்னையில் சின்ன கொடுங்கையூரில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் அனைத்து எதிரிகளையும் தெரியும், இவ்வழக்கின் புகார்தாரரான நடராஜன் என்பவர் எனது தந்தையாவார். எனது தந்தை கடந்த 14.10.2014 அன்று இயற்கை எய்திவிட்டார். எனது தந்தையின் கையொப்பம் எனது சிறு வயது முதலே பார்த்து வளர்ந்த காரணத்தினால் அவரது கையொப்பத்தை அடையாளம் காட்டவியலும். என்னிடம காட்டப்படும் 30.04.2013 தேதியிட்ட புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடைய தந்தையுடையதாகும். மேற்படி கையொப்பம் அதசஆ 1 ஆகும். எனது தகப்பனார் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார். எனது தந்தைக்கு பூர்வீக அடிப்படையில் கிடைக்கப்பெற்ற ரூ,5 கோடி மதிப்பிற்கு மானாவரி மற்றும் மணை ஆகியவை பாகமாக கிடைக்கப்பெற்றது. என்னுடன் எனது அக்கா தாமரைச்செல்வி ,தம்பி தர்மராஜ், தங்கைகள் தனலெட்சுமி ம்ற்றும் பவானி ஆகியோர் உடன் பிற்நதவர்கள் ஆவார்கள். அதில் எனது தங்கை தனலெட்சுமி' கடந்த 1984 ஆம் ஆண்டு பிரசவத்தின்போது இறந்துவிட்டார். எனது தந்தை வயது மூப்பின் காரணமாக அவருக்கு பூர்வீகமாக கிடைத்த சொத்துக்களை வழியினை ஏற்படுத்தி நான்கு பிரிவுகளாக பிரிவுகளா தலா 6 சென்ட் வீதம் பிரித்தார். அதில் எனது அக்கா தாமரைசெல்வி என்பவருக்கு 43 சென்ட் இடத்தினை பாகமாக கொடுத்தார். மீதமுள்ள எங்கள் மூவருக்கும் தலா 6 சென்ட் இடத்தினை பாகமாக கொடுத்திருந்தார். கூடுதலாக எனது தாமரைச்செல்வி என்பவருக்கு 6 சென்ட் இடத்தினை பாகமாக கொடுத்திருந்தார். எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தினை வீடுகட்ட

அயல்நாட்டில் பணிபுரிந்து வந்த பணத்தை கொண்டு புத்தூரில் உள்ள பொறியாளர் வாயிலாக நடவடிக்கை மேற்கொண்டேன். மேற்படி வீடுகட்ட வேண்டிய பணத்தினை நான் அயல்நாட்டில் இருந்துவந்த காரணத்தினால் எனது அக்கா மகன் தியாகராஜன் வாயிலாக கொடுத்திருந்தேன். இதற்கிடையே பொறியாளர் மரியமார்ட்டின் மற்றும் மேற்படி தியாகராஜன் என்பவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பொறியாளரை வெளியேற்றி தியாகராஜன் என்பவரை வீடு கட்ட ஏற்பாடு செய்தேன். மேற்படி கட்டுமான பணிக்கு தியாகராஜன் என்பவருக்கு வங்கி கணக்கு வாயிலாக 9.75 லட்சமும், எனது தங்கை பவானி என்பவரின் வங்கி கணக்கு வாயிலாக 2 லட்சமும், எனது தந்தை வங்கி கணக்கு வாயிலாக ரூ1 லட்சமும், பொறியாளர் மரியமார்ட்டின் என்பவரிடம் ரூ,1 லட்சமும் கொடுத்து தியாராஜன் என்பவரிடம் வீடு கட்ட அனுப்பியிருந்தேன். நானும் அயல் நாட்டில் இருந்து வந்து சுமார் 12 லட்சம் மதிப்பிற்கு செலவு செய்து வீடு கட்டி முடித்தோம். மேற்படி வீட்டில் எனது தாய் தந்தையரை குடியமர்த்தினேன். ஆனால் மேற்படி வீட்டினை அபகரிக்கும் நோக்கினில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் எனது தந்தையை திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று எனது அக்கா தாமரைச்செல்வி எ்னபவருக்குரிய பாகத்தினை தான செட்டில் மென்ட் பெற்றுக்கொண்டார். அதனை பின்னிட்டு கடந்த 20.03.2013 பொய் சொல்லி வெளியே அழைத்து செல்வதாக கூறி திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துசென்று ஏற்கனவே அளித்திருந்த தான செட்டில்மென்டில் பிழை இருப்பதாக சொல்லி 1 முதல் 3 வரையிலான எதிரிகள் நிர்பந்த படுத்தி ஆவணத்தினை படிக்கவிடாமல் கையொப்பம் பெற்று இதர சொத்துகளை பொறுத்தும் தான செட்டில்மென்ட் எழுதி வாங்கி கொண்டார்கள். மேற்படி சம்பவம் குறித்து எனது தந்தை வீட்டிற்கு வந்து எனது தம்பியிடம் கூறியுள்ளார். அதனை தொடர்ந்து எனது தம்பி சார் பதிவாளர் அலுவலகம் சென்று விசாரித்ததில் சொத்துகள் அபகரிக்கப்பட்ட விபரம் குறித்த விபரம் தெரியவந்தது. மேற்படி சென்டில்மென்ட் ஆவணத்தினில் நான் கட்டிய வீட்டினை காலி மனையாக காண்பித்து ஏமாற்றி பதிவு செய்துள்ளார்கள். இதுகுறித்து நான் அயல் நாட்டில பணிபுரிந்து வந்த காரணத்தினால் எனது தம்பி தொலைபேசி வாயிலாக தெரிவித்தார். பிறகு நான் அயல் நாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு எனது தம்பி மற்றும் எனது குடும்ப நண்பர் பாண்டியன் மற்றும் மாரிமுத்து ஆகியோரை அழைத்துசென்று விபரம் கேட்டேன். அப்போது எனது அக்கா மற்றும் அக்கா மகன் இருவரும் சொத்து எனக்குதான் சொந்தம் வேண்டுமானால் உனது பணத்தை பெற்று கொள் என பேசி கொலை வெறியுடன் மிரட்டல் விடுத்தார்கள். இதுதொடர்பாக 08.04.2013 தேதியன்று வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். ஆனால், வேளாங்கண்ணி காவல் நிலையத்தார் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனைபின்னிட்டு நான் அயல் நாட்டிற்கு

சென்றுவிட்டேன். எனது தம்பி தர்மராஜ் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம், எதிரிகளுக்கு எதிராக புகார் அளித்துள்ளார். இதுதொடர்பாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.